## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 06-ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 20-ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.02/2025 இன் அ.வ.எண்.69/2024**

1) புதுமை லெட்சுமி

2) விஜயா ... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1) தமிழ்நாடு அரசு
திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர்
மூலமாக

2) தாசில்தார்
இராதாபுரம் ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.09.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J. மகேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு. V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.06 15:49:41 +0530

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விவரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்::-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் இதர பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பாரா 2 ல் மனுதாரரின் சகோதரர் தர்மராஜின் இறப்பு தேதியான 22.08.2016 என்பதற்கு பதிலாக கவனக்குறைவாக மனுதாரரின் தகப்பனார் கவலமுத்து அவர்களின் இறந்த தேதியான 28.11.2015 ஐ தவறுதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி தவறானது மனுதாரர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்ட ஒன்றாகும். தற்போது வழக்கு விசாரணைக்கு மனுதாரர்களின் வழக்கறிஞரை சந்தித்தபோது தான் மேற்படி தவறானது தெரியவந்தது. மேற்படி தவறை வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கவுண்டர் மெமோவின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் அசல் வழக்கின் வழக்குரை பாரா 2 ல் மனுதாரரின் சகோதரர் தர்மராஜ் அவர்களின் இறப்பு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.06 15:49:49 +0530

தேதியான 22.08.2016 என்பதற்கு பதிலாக கவனக்குறைவாக மனுதாரரின் தகப்பனார் கவலமுத்து அவர்களின் இறந்த தேதியான 28.11.2015 ஐ தவறுதலாக குறிப்பிட்டுள்ளதால் மேற்படி தவறை வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். உண்மையில், வழக்குரை பாரா-2 ல் மேற்படியார்களின் இறப்பு சான்றிதழ்கள் தாக்கல்செய்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால், வழக்குரையுடனோ, இம்மனுவினுடனோ மேற்படியார்களின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி தர்மராஜ்ன் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டால் மட்டுமே மேற்படியாரின் இறப்பு தேதி உறுதி செய்ய இயலும். மனுதாரர்களால் இம்மனுவானது வழக்கை இழுத்தடிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கின் பாரா 2 ல் மனுதாரரின் சகோதரர் தர்மராஜின் இறப்பு தேதியான 22.08.2016 என்பதற்கு பதிலாக கவனக்குறைவாக மனுதாரரின் தகப்பனார் கவலமுத்து அவர்களின் இறந்த தேதியான 28.11.2015 ஐ தவறுதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி தவறானது மனுதாரர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்ட ஒன்றாகும். தற்போது வழக்கு விசாரணைக்கு மனுதாரர்களின் வழக்கறிஞரை சந்தித்தபோது தான் மேற்படி தவறானது தெரியவந்தது. அதுவகைக்கு வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி உத்தேச திருத்தத்தால் வழக்கின் தன்மை மாறக்கூடியதல்ல என மிகவும் அவசியமானது என கூறியுள்ளார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.06 15:49:56 +0530

4. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினை முற்றிலுமாக தீர்மானிக்க இம்மனுவில் கூறப்படும் திருத்தம் அவசியமானது. மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.10.06 15:50:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>-இல்லை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.10.06 15:50:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முப.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2025 இன்

அ.வ.எண்.69/2024

தேதி.06.10.2025